
மகிழ்ச்சியான
பிறந்தநாள் வாழ்த்து!

இந்தக் கதையை வாசிக்க

ரவி தனது பத்தாவது பிறந்தநாளை கொண்டாடும் நாள்.

அநேக நண்பர்கள் அவனுடைய பிறந்த நாளுக்காக வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் பரிசு கொண்டு வந்திருந்தார்கள். விளையாடினார்கள். கேக், ஐஸ்கிறீம் போன்றவற்றைச் சாப்பிட்டார்கள். இப்போது கிடைத்த அநேக பரிசுப்பொருட்களைத் திறந்து பார்க்கும் வேளையாக ரவி உணர்ந்தான்.

ஒன்றன்பின் ஒன்றாக ரவி பொருட்களைத் திறந்தான். ஒரு நவீன கார், ஒரு றொக்கட், கப்பல், புத்தகம், ஒரு அழகான கைக்கடிகாரம், இந்த பரிசுப் பொருட்கள் எல்லாம் ரவிக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டவை. ரவியை உண்மையாக நேசித்த நண்பர்களால் கொடுக்கப்பட்டவை.

ரவி அன்று தனது பிறந்தநாள் என்பதால் மிகவும் சந்தோஷப்பட்டான். 10 வருடங்களுக்கு முன்பாக தான் ஒரு சிறு குழந்தையாக பிறந்ததைக் கொண்டாடுகிறேன் என்பதே அவனது சந்தோஷத்துக்கான காரணம்.

தனது மிக நெருங்கிய நண்பனான ‘மோகன்’ கொடுத்த அன்பளிப்பைக் கடைசியாகத் திறந்தான். அன்பளிப்புக்குள்ளே ஒரு கேள்வி எழுதப்பட்ட ஒரு துண்டுக் காகிதம் சொருகப்பட்டிருந்தது. இது தான் கேள்வி.

“தேவனுடைய குடும்பத்தில் சேர்ந்துள்ளாயா?”

இது ரவியை திக்குமுக்காட வைத்தது. நான் தேவனுடைய குடும்பத்தில் சேர்ந்துள்ளேனா? என்று தன்னையே கேட்டான்.

‘மோகன்’ நீ என்ன நினைக்கின்றாய்? நான் தேவனுடைய குடும்பத்தில் சேர்ந்துள்ளேனா? சொல்

நல்லது, நீ ஒரு கிறிஸ்தவனா? என மோகன் கேட்டான்.

நான் ஆலயத்திற்குப் போகிறேன். இதைத் தானே நீ கருதுகிறாய்? என்றான் ரவி.

நீ தேவனுடைய குடும்பத்திற்குள் பிறக்க வேண்டும். அதன் பிற்பாடு ரவி உன்னால் 2 பிறந்த நாட்களைக் கொண்டாட முடியும்.

இரண்டு பிறந்த நாட்களா? நீ பகிடி பண்ணுகிறாய்! என்றான் ரவி

இப்போது ரவிக்கு மேலும் குழப்பம். எப்படி மறுபடியும் பிறக்க முடியும். எப்படி தேவ குடும்பத்தில் சேர்வது? எப்படி கிறிஸ்தவனாவது?

நீயும் ரவி போலிருக்கிறாயா? நீயும் தடுமாறுகிறாயா? எப்படி என்று தெரியுமா? தெரியாவிட்டால் தொடர்ந்து வாசி – எப்படி இரண்டு பிறந்த நாட்களைக் கொண்டாட முடியுமென அறிந்து கொள்ளலாம்.

1. எல்லாரும் தவறு செய்துள்ளார்கள் என அறிவாயா? வேதம் சொல்கிறது “எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களானார்கள்”
2. நீ செய்த எல்லாத் தவறுகளுக்குமுரிய தண்டனையை இயேசு தம்மேல் சுமந்து சிலுவையில் மரித்தார் என்பதை நீ அறிவாயா?

3. முழு உலகுக்கும் ஒரு அன்பளிப்பாக பிதா தமது குமாரனாகிய இயேசுவை அனுப்பினார் என்பதை நீ அறிவாயா?
4. இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதை நீ அறிவாயா?
5. நீ ஒரு கிறிஸ்தவனாக வேண்டுமென்பதை தேவன் விரும்புகிறார் என அறிவாயா? நீ தேவனுடைய குடும்பத்திற்குள் மறுபடியும் பிறந்ததால் உனக்கு இரண்டு பிறந்த நாட்கள் வரும். இதுவே இதன் கருத்து. யோவான் 3:7ல் இயேசு சொல்கிறார் "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்"

இப்போது ஜெபத்தில் தேவனுடைய குடும்பத்தில் சேர்வது பற்றி அவருடன் பேச நீ விரும்புகிறாயா?

1. முதலில் நீ செய்த பிழையான காரியங்களை மன்னிக்கும்படி அவரிடம் கேள். எல்லாரும் பாவம் செய்தோம். ரோமர் 3:23
2. உனக்காக இயேசு சிலுவையில் மரிக்க அவரை தேவன் கொடுத்தார் என்பதை விசுவாசிப்பதாக அவருக்குச் சொல். வேத வாக்கின்படி இயேசு எங்கள் பாவங்களுக்காக மரித்தார். 1 கொரிந்தியர் 15:3
3. இயேசுவே உனது சொந்த இரட்சகராகவும், நண்பனாகவும் இருக்க வேண்டுமென்று நீ விரும்புவதாக தேவனிடம் சொல். 'அவரை' ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். யோவான் 1:12
4. உனது பரலோக பிதா தமது குமாரன் இயேசுவைத் தந்தபடியால் தேவனுக்கு நன்றி சொல். 2 கொரிந்தியர் 9:15
5. நீ தேவனின் கிறிஸ்தவ குடும்பத்திற்குச் சொந்தமானவன் என பிறருக்குச் சொல். லூக்கா 2:17

# நீ செய்யக்கூடிய ஒரு ஜெபம்...

## ஒரு ஜெபம்...

அன்பின் பிதாவே,
நான் செய்த பிழைகளை மன்னியும். உமது மகனான இயேசு எனது பாவங்களை எடுத்துக்கொண்டு எனக்காக மரித்தார் என நான் விசுவாசிக்கிறேன்.
ஒரு கிறிஸ்தவனாக நடக்க உதவி செய்யும். நான் செய்வதும் சொல்வதும் உம்மை பிரியப்படுத்துவதாகவிருக்க உதவி செய்யும்.
உமது மகனான இயேசு, என்னை நேசிக்கிறார், உதவி செய்கிறார் என்பதால் தேவனே உமக்கு நன்றி கூறுகின்றேன்.
ஆமேன்.

## நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை நான் அறிவேன். ஏனெனில்:

### வேதம் சொல்கிறது

கலாத்தியர் 3:26 … நான் அவருடைய பிள்ளை.
1 யோவான் 1:9 … தேவன் என்னை மன்னிக்கிறார்.
யோவான் 3:16 … தேவன் என்னை நேசிக்கிறார்.
யோவான் 14:2-3 … நான் பரலோகம் போவேன்.

எனது பெயர் : ………………………..

நான் தேவனுடைய குடும்பத்தில்

………………… (திகதி) அங்கத்தவனானேன்.

## இப்போது நீ தேவனின் பிள்ளையும், அவர் குடும்பத்தில் ஒரு அங்கத்தவனுமானாய்…

வேதத்தை ஒவ்வொரு நாளும் வாசி. பரலோக பிதாவாகிய தேவனோடு பேசு. ஒழுங்காக ஓய்வுநாட் பாடசாலைக்கும், ஆலயத்திற்கும் செல். உனது நண்பர்களுக்கும் இயேசுவைப் பற்றிச் சொல். அன்பையும், தயவையும் வெளிப்படுத்து. எல்லா வழிகளிலும் உன்னை விட்டுக்கொடு.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ள:-

FMP
Foursquare Missions Press
© 2017